தலைமைக் கழகப் பிரதிநிதிகள் என்.மருது கணேஷ் – ராணி ரவிச்சந்திரன் முன்னிலையில் நடைபெறுகிறது!

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஆலந்தூர் திருபெரும்புதூர் சட்டமன்ற தொகுதிகளில் அடங்கிய கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் (05.09.2026 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில், குன்றத்தூர், செங்குந்தர் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும் மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் தலைமை கழகப் பிரதிநிதிகள் என்.மருது கணேஷ் மற்றும் ராணி ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் ஆலந்தூர் திருபெரும்புதூர் தொகுதிகளுக்குட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளில் உள்ள மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கு ஏற்று சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- கழக ஆக்கப் பணிகள்

**தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

---

விவசாயிகளுக்கும் பொது மக்களுக்கும் பயனுள்ள வகையில்

# மணலூர்பேட்டையில் உழவர் சந்தை அமைத்திட வேண்டும்!

## சட்டப்பேரவையில் வசந்தம் கார்த்திகேயன் கோரிக்கை!



சென்னை, செப். 3-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் போது ரிஷிவந்தியம் தொகுதி உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன், விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் பயனுள்ள வகையில் மணலூர்பேட்டையில் ஒரு உழவர் சந்தை அமைத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து வசந்தம் கார்த்திகேயன் பேசியதாவது:

ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட மணலூர் பேட்டைப் பேரூராட்சி என்பது, 15,000 மக்கள் தொகையைக் கொண்ட பெரிய பேரூராட்சியாகும். அதைச் சுற்றியுள்ள 20 கிராமங்களில் 60,000 மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் அன்றாட நிகழ்வுகளுக்காக எதை வாங்க வேண்டுமென்றாலும், மருத்துவமனை செல்ல வேண்டுமென்றாலும் மணலூர்பேட்டைக்குதான் வரவேண்டியுள்ளது. அப்படிப்பட்ட மணலூர் பேட்டையில் ஒரு உழவர் சந்தை அமைத்துக்கொடுத்தால் அங்குள்ள விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் பெரும் பயனுள்ளதாக இருக்கும்.

எங்கள் மாவட்டத்தின் தலைநகரான கள்ளக்குறிச்சியில் இருக்கின்ற உழவர் சந்தை, சிறிய குறுகலான இடத்தில் இருக்கிறது. இதனால் தினமும் காலை 6 மணியிலிருந்து 9 மணி வரையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. எனவே, அந்த உழவர் சந்தையை விஸ்தரித்துத் தர வேண்டும்.

அதற்கு அங்கே போதிய நிலம் இல்லையென்றால் அரசுக்கு தானமாக நாங்கள் நிலத்தை கொடுப்பதற்கும் தயாராக இருக்கின்றோம். ஆகவே, அந்த இடத்தை விஸ்தரிப்பு செய்து தர வேண்டும். அதாவது, அந்த சந்தைக்கு இடமில்லாமல் கள்ளக்குறிச்சி நகராட்சியைப் பொறுத்தமட்டில் பொதுவாக அரசு நிலங்கள் இல்லை. நேற்றுகூட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லிதான் COLLECTOR'S CAMP OFFICE கட்டுவதற்கு ARRANGEMENT செய்தோம்.

நகராட்சியை ஒட்டி இடமில்லாத காரணத்தினால் அந்த உழவர் சந்தை அமைக்க நிலம் வேண்டுமென்றாலும் நாங்கள் இலவசமாக அரசுக்கு தரவும் தயாராக இருக்கின்றோம். அங்கு ஒரு புதிய உழவர் சந்தையை அமைத்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும். மக்களுக்கு பயனாக இருக்கும் என்று பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வசந்தம் கார்த்திகேயன் கோரிக்கை வைத்தார்.

---

த.வெ.க. ஆட்சியின் கடுமையான விலைவாசி உயர்வைக் கண்டித்து

# கும்பகோணம் மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றாதது ஏன்?

## காங். மேயரை கண்டித்து தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு!

தஞ்சாவூர், செப். 3-

கும்பகோணம் மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியில் விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளதை கண்டித்து திமுக துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்த கண்டன தீர்மானத்தை காங்கிரஸ் மேயர் ஏற்றுக் கொள்ளாததால் திமுக மாமன்ற உறுப்பினர்கள் அனைத்து தீர்மானங்களையும் நிராகரித்து வெளி நடப்பு செய்தனர்.

கும்பகோணம் மாநகராட்சி மன்ற சாதாரண கூட்டம் கும்பகோணம் கோசி. மணி மாமன்ற வளாகத்தில் இரா.துரை மாமன்ற கூட்ட அரங்கில் மேயர் சரவணன் தலைமையிலும், துணை மேயர் சு.ப.தமிழழகன் மற்றும் ஆணையர் சுதா ஆகியோர் முன்னிலை யிலும் நடைபெற்றது.

மாமன்றத்தில் 34 தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டு கூட்டம் தொடங்கியது. கூட்டத்தில் மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன் தூய்மை பணியாளர்கள் பேராட்டத்தை பற்றியும், குப்பைகளை பொது மக்கள் தரம் பிரித்து தருவது தொடர்பாக மேயரிடமும், ஆணையரிடமும் வினா எழுப்பினார்.

அப்போது குறுக்கிட்ட த.வெ.க கட்சியை சார்ந்த உறுப்பினர் ஆதிலட்சுமி நேபாள விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தீர்மானம், விபத்தில் சிக்கிக் கொண்டவர்களை பாதுகாப்பாக மீட்டு வர நடவடிக்கை எடுத்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானமும் கொண்டு வந்தார். இதனை ஏற்றுக் கொள்ளாத திமுக மாமன்ற உறுப்பினர்கள் இரங்கல் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதாகவும், அதே நேரத்தில் தமிழக அரசின் செயல்பாடு திருப்தியாக இல்லாததால் அதனை நிராகரிப்பதாகவும் தெரிவித்ததால். த.வெ.க. உறுப்பினருக்கும், தி.மு.க. உறுப்பினர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. தொடர்ந்து திமுக துணை மேயர் சு.ப.தமிழழகன் நேபாள விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தீர்மானம் வாசித்து அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து தி.மு.க மாமன்ற உறுப்பினர்கள் 30க்கும் மேற்பட்டோர் தமிழக வெற்றிக் கழக 100 நாள் ஆட்சியில் அரிசி, பருப்பு, சீனி உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய பொருட்களும் கடுமையாக விலை உயர்ந்துள் ளதாக கண்டித்து கண்டன தீர்மானம் கொண்டு வந்தனர்.

இதற்கு தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மேடையை தட்டி ஆரவாரம் செய்தனர். 45 உறுப்பினர்கள் கொண்ட மாமன்றத்தில் 30க்கும் மேற்பட்ட தி.மு.க. உறுப்பினர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சியை சார்ந்த அய்யப்பன் என்ற உறுப்பினரும், சி.பி.ஐ.எம். கட்சியை சார்ந்த உறுப்பினர் செல்வம் ஆகியோர் ஆதரவு தெரிவித்து கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை மேயர் சரவணன் ஏற்காமல் இரங்கல் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றியாதாக அறிவித்தார். ஆனால் தமிழக அரசுக்கு எதிராக கண்டன தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசுக்கு எதிராக எப்படி தீர்மானம் நிறைவேற்ற முடியும் என்று கேள்வி எழுப்பினார். அதற்கு பெரும்பான்மையான உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டு வரும் பொழுது அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டியது மேயரின் பொறுப்பு. மேயர் இதனை செய்யாததால் இதை கண்டித்து திமுக மாமன்ற உறுப்பினர்கள் முழக்கங்கள் எழுப்பியதுடன் அங்கு கடும் வாக்குவாதம் செய்தனர். இதனால் பரபரப்பு நிலவியது. கண்டன தீர்மானத்தை மேயர் ஏற்றுக் கொள்ளாததால் கூட்டத்தில் வைக்கப்பட்ட 34 தீர்மானங்களையும் நிராகரிப்பதாக கூறி தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். இந்நிலையில் மேயர் சரவணன் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதாக அறிவித்தார்.

இது குறித்து மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்ததாவது காங்கிரஸ் கட்சி மேயர் சரவணன் அவர்களை தி.மு.க உறுப்பினர்கள் தான் மேயராக தேர்வு செய்தோம், அதே நேரத்தில் மாமன்ற விதிகள்படி அதிகப்படியான உறுப்பினர்கள் ஆதரவு தெரிவிக்கும் தீர்மானம் மட்டுமே மன்றத்தில் நிறைவேற்றப் படும். ஆனால் காங்கிரஸ் கட்சியின் மேயரோ தன்னிச்சையாக செயல்படுகிறார். தி.மு.க. உறுப்பினர்கள் மட்டும் இல்லாமல் த.வெ.க கட்சியின் ஆட்சியில் பங்கு வகிக்கும் அவருடைய காங்கிரஸ் கட்சியை சேர்ந்த உறுப்பினர் அய்யப்பன் மற்றும் சி.பி.ஐ.எம். கட்சியை சேர்ந்த செல்வம் ஆகியோரும் விலைவாசி உயர்வுக்கு எதிரான கண்டன தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்த தீர்மானத்தை கூட நிறைவேற்றாமல் ஜனநாயக கடமையை மீறுவதாக குற்றம் சாட்டினர்.

---

தலைமைக் கழகப் பிரதிநிதிகள் சி.என்.அண்ணாதுரை எம்.பி - கோவி.லெனின் முன்னிலையில் நடைபெறுகிறது!

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு, திருப்போரூர் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கிய கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் (05.09.2026 - சனிக்கிழமை) மாலை 4 மணி அளவில், குரோம்பேட்டை, ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஆனந்தா திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும் மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் தலைமை கழகப் பிரதிநிதிகள் சி.என்.அண்ணாதுரை எம்.பி மற்றும் கோவி.லெனின் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு, திருப்போரூர் ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகள் உட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கு ஏற்று சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- கழக ஆக்க பணிகள்.

**தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

---

# மேகதாது அணைக்கட்டுக்கும் அரசுகளுக்கும் எச்சரிக்கை மணி!

## கணையாழி தலையங்கம்!




நேபாளப் பேரிடர்
அரசுகளின் பொறுப்பின்மைக்கு
இயற்கையின் தண்டனை!

மலைகளின் தேசமான நேபாளம்
இயற்கையின்
கொடூரமான முகத்தை
எதிர்கொண்டிருக்கிறது மீண்டும்!

உயிர்களையும்
உடைமைகளையும் மட்டுமல்ல
மூழ்கடித்திருக்கிறது
மக்களின் நம்பிக்கையையும்
எதிர்காலத்தையும்!

மறுபடியும் மறுபடியும்
சொல்லிச் சென்றிருக்கிறது
இயற்கையை
வெல்ல முடியாது என்பதை
இயற்கைப் பேரிடர்!

இயற்கையின் இயல்பான முகங்கள்:
வெள்ளம், நிலச்சரிவு,
நிலநடுக்கம், மேக வெடிப்பு.
ஆனால்
அவை பேரழிவுகளாக
மாறுவதற்கு அரசுகளே பொறுப்பு!
கடல் கொந்தளிப்புகளில்-
கடல்கோளில் கரையோர ஊர்களை மட்டுமல்ல
பஃறுளி ஆறு, பன்மலை அடுக்கம்,
குமரி மலை கொண்ட
இலெமூரியா கண்டத்தையே
விழுங்கியிருக்கிறது கடல்!
ஆனால்
இலக்கியத்தில், வரலாற்றில்
தேட வேண்டியிருக்கிறது
மலை விழுங்கிய ஊர்களின் பதிவுகளை!

மலைச்சரிவுகளில்
கட்டுப்பாடற்ற கட்டுமானங்கள்!

காடழிப்பு!
நீர்வழித் தடங்களின் ஆக்கிரமிப்பு!
முறையான திட்டமில்லா
நகரமயமாக்கல்!
எல்லாம்
சீற்றம் அடையச் செய்கின்றன
இயற்கையை!
சீற்றம் பேரிடராக மாறிவிடுகிறது!
சிக்கலை ஏற்படுத்துகிறது
புவியியல் அமைப்பு!

நிலச்சரிவு, நிலநடுக்கம்,
திடீர் வெள்ளம்
பேரிடர்களின் தொட்டில்கள்!

கவனிக்கப்பட வேண்டும்
பொருளாதார வளர்ச்சிக்கான
வளர்ச்சித் திட்டங்களில்
சுற்றுச்சூழல் பாதுகாப்பும்
மக்கள் பாதுகாப்பும்!

மீட்புப் பணி மட்டுமல்ல
வரும் முன் காப்பதும்
அரசின் கடமை!
பத்து நாளைக்குப் பிறகு
வரக்கூடிய மழையைச் சொல்கிற
வானிலை அறிக்கை
ஒரு நாளைக்கு முன்னதாக
இயற்கைப் பேரிடரைச் சொல்ல
ஏற்பாடு இல்லையே ஏன்?

கண்டம் விட்டுக் கண்டம் பாய்கிற
ஏவுகணையை
வழிமறிக்கும் தொழில்நுட்பம்
தரை நோக்கிப் பாய்ந்து வரும்
மலை உச்சியைத்
தடுக்க முடியவில்லையே!

எல்லைகள் எல்லாம்
மக்கள் உருவாக்கும்
நாடுகளுக்குத்தான்.
எல்லைகள் உண்டா
ஆறுகளுக்கும்? மலைகளுக்கும்?
எல்லைகளால் பிரிந்து கிடக்கும்
நாடுகள் கூட
ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்
இயற்கையோடு!

ஒரு நாட்டில் பெய்யும் மழை
பாதிக்கக்கூடும்
அடுத்த நாட்டையும்!
தனித்தனி நாடுகளின் பிரச்சினை இல்லை
இயற்கைப் பேரிடர்!
அது
மனித குலத்தின் கூட்டுப் பிரச்சினை!
இணைந்து வாழக் கற்கவேண்டும்
இயற்கையோடு!
இயற்கையின் எச்சரிக்கைகளைப்
புறக்கணித்துவிட்டு,
பேரழிவுகளில் புலம்புவதில்
என்ன பலன்?
ஆற்றுநீர் மேலாண்மை என்று
மேலும் மேலும்
நீர்வழித் தடத்தை,
இயற்கையின்
நீரோட்டப் பாதையை வழிமறித்து
அணையைக் கட்டுவது
எங்கே கொண்டுபோய்
எப்போது விடும்?
என்பதற்கான எச்சரிக்கை மணிதான்
நேபாள வெள்ளப் பேரிடர்!

இயற்கையை எதிர்த்து நின்றதில்
இல்லை
கடந்த கால நாகரிகம்!

இயற்கையோடு
இணைந்து வாழ்வதில்தான்
உருவாகப் போகிறது
இனிவரும் நாகரிகமும்! நேபாளத்தின் கண்ணீர்
ஒரு நாட்டின் கண்ணீர் அல்ல! அது
இயற்கையைப் புறக்கணிக்கும்
அரசுகளுக்கான எச்சரிக்கை!
நேபாளத்தின் கண்ணீர்
மேகதாது அணைக்கட்டுக்கும்
அரசுகளுக்கும்
எச்சரிக்கை மணி!



**அன்புடன்**
**ம.ரா.**

நன்றி: **கணையாழி**
செப்டம்பர் 2026




கும்பகோணம் மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் தமிழகத்தில் அதிகரித்துவரும் விலைவாசி உயர்வைக் கண்டுக்கொள்ளாத த.வெ.க. அரசைக் கண்டித்து 30க்கும் மேற்பட்ட தி.மு.க. உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றாத காங்கிரஸ் மேயரை கண்டித்து துணை மேயர் சு.ப.தமிழழகன் தலைமையிலான தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.